[1979 மார்ச் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வழியோரக் கிராமங்களைப்பற்றிய கேள்வி. உங்கள் ஊர் நகராட்சி.

அருப்புக்கோட்டை குடிநீர்த் திட்டம்.

* வினா எண். 229—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை குடிநீர் திட்டத்தின்கீழ் நரிக்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆவரங்குளம், புல்வாய்க்கரை போன்ற பெரிய கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) தற்பொழுது அருப்புக்கோட்டை குடிநீர் திட்ட நீரேற்றுக் குழாயிலிருந்து புல்வாய்க்கரை கிராமத்திற்கு இரட்டை பொதுக் குழாய் அமைத்து அதன் வாயிலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆவரங்குளம் (என்ற பிள்ளையார்குளம்) அருப்புககோட்டைக் குடிநீர்த் திட்டத்திலுள்ள வழிப்புற கிராமங்களில் ஒன்று. கிராமக் குடிநீர் திட்டத்தின்கீழ் புல்வாய் கரை, ஆவரங்குளம் ஆகிய இரு கிராமங்களுக்கும் அருப்புக்கோட்டை குடிநீர் திட்ட நீரேற்றுத் திட்டத்திலிருந்து முழு அளவில் குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : அருப்புக்கோட்டைப் பகுதியில் குடிநீர் எடுப்பதற்கு என்று போடப்பட்ட குழாய்கள் எல்லாம் விவசாயிகளால் உடைக்கப்பட்டு இதுவரை குடிநீர்த்திட்டம் முதுகளத்தூர், பரமக்குடி போன்ற பகுதிகளில் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே அருப்புக்கோட்டைக்குக் கொடுப்பதுபோல் வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து முதுகளத்தூர், பரமக்குடி பகுதிகளுக்கும் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.